**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, PUDUKKOTTAI.**
**IDOP.No. 28/2015**

R.W.3 இலக்கியா த/பெ.ஜோசப் கென்னடி நாள் – 22.01.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–**

எனக்கு ஞானஸ்தானம் எனது அப்பா வீட்டில் நடந்தது என்றால் சரிதான் . எனது தம்பியின் ஞானஸ்தானம் எனது தாத்தா வீட்டில் நடந்தது என்றால் எனக்கு தெரியாது . எனக்கும், எனது தம்பிக்கும் புதுநன்மை எனது தாத்தா வீட்டில் தான் நடந்தது என்றால் சரிதான். எனது அம்மா எனது அப்பாவின் மீதும், ஷோபா என்பவர் மீதும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு நடந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான் . ஆலங்குடி நீதிமன்றத்தில், எனது அம்மா கொடுத்த புகார் பொய்யானது என்று எனது அப்பாவும், ஷோபா என்பவரும் விடுதலை செய்யப்பட்டனர் என்றால் சரிதான். பூப்பெய்திய சடங்கு எனது தாத்தா வீட்டில் தான் நடந்தது என்றால் எனக்கு அதுபோல் எதுவும் செய்யவில்லை . எனக்கு அதுபோன்று சடங்கு நடந்தது என்றும் , நான் அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எனது அம்மாவும் , அப்பாவும் சுமார் 10 ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் அவர்கள் பிரிந்து வாழவில்லை, எனது அம்மா அவர் வீட்டில் இருக்கிறார், எனது அப்பா வெளியூரில் (புதுக்கோட்டையில்) இருந்து வருகிறார். கிராமத்தில் எனது தாத்தாவிற்கு நிறைய சொத்துக்கள் உள்ளது என்றால் நிறைய சொத்துக்கள் இல்லை, ஆனால் சொத்துக்கள் உள்ளது . எனது தாத்தா சொத்துக்களில் சில சொத்துக்களை எனது அம்மா எனக்கும் , எனது தம்பிக்கும் தான செட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான் . 2015 ம் ஆண்டில் எனது அப்பா வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு எனது அம்மா பராமரிப்பு செலவிற்கு பணம் வேண்டுமென்று கேட்டு, எனக்கு மாதம் ரூ.8000/– கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பானது என்றால் சரிதான் . அந்த தொகை குறைவானது

என்று கூறி, எனது அம்மா தாக்கல் செய்த மனுவின் பேரில் மாதம் ரூ .9,000/- கொடுக்க உத்தரவானது என்றால் சரிதான் . அந்த தொகையை கடந்த டிசம்பர் மாதம் வரை எனது தந்தை பணம் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான் . நான் எனது அம்மாவை சார்ந்திருப்பதால் , அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எனது அப்பாவையும், அம்மாவையும் சேர்த்து வைப்பதற்கான எந்தவொரு சட்டப்பூர்வ நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல . வழக்கிற்காக, எனது அப்பாவையும் , அம்மாவையும் சேர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுத்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*